தேவனுடைய நல்ல செய்தி, அவர் உன்மேல் அதிக அன்பாயிருக்கிறார் மற்றும் நீ எப்பொழுதும் அவரோடு இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

ஒவ்வொரு வண்ணத்தினுடைய செய்தியையும் ஞாபகம் வைத்துக்கொள்.

தங்க நிறம் பரலோகத்தில் இருக்கும் தேவனை ஞாபகப்படுத்துகின்றது.

கருப்பு நிறம் எப்படி நம் இருதயம் பாவத்தினால் இருளானது என்று சொல்கிறது.

சிவப்பு நிறம் நம்மை விடுதலை செய்வதற்காக மரித்த இயேசுவை பற்றி சொல்கிறது.

வெள்ளை நிறம் கிறிஸ்துவுக்குள் சுத்தமான புது வாழ்க்கையைக் காட்டுகிறது.

பச்சை நிறம் ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டிய வளர்ச்சியைப் பற்றி பேசுகிறது.

தேவன் உன் இருதயத்தைப் பார்க்கும்போது, பாவத்தினால் அசுத்தமானதை

அவர் பார்க்கிறாரா? அல்லது இயேசு கிறிஸ்துவினால் நீ சுத்தமாய் இருக்கிறதை அவர் பார்க்கிறாரா?

உன் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று நீ விரும்பினால், உன் இருதயத்தை தேவனிடத்தில் திருப்பி, இயேசு கிறிஸ்துவின் மேல் உன் நம்பிக்கையை வைக்க சரியான நேரம் இதுவே.

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)*

*என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். (ரோமர் 10:9)*

**SATHGAMAYA MEDIA FOUNDATION**
Church Junction, Mylapra Town P.O., Pathanamthitta.

# வண்ணங்களில் காணும் தேவனுடைய நல்ல செய்தி

நாம் இந்த உலகில் பார்க்கின்ற எல்லாவற்றையும் உன்னையும், என்னையும் தேவன் படைத்தார் என்று பைபிள் சொல்கின்றது.

இந்த **தங்க** நிறம் தேவன் பரலோகத்தில் இருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்துகிறது. மனிதனோடு ஒரு அழகான உறவு இருக்க வேண்டும் என்று தேவன் ஆசைப்படுகிறார்.

## தேவன்

**தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, தேவன் பரலோகத்-திலிருந்து-மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.**

சங்கீதம் 53:2.

தேவன் நம்மைப் பார்க்கும் போது, நம்மைப் பற்றிய எல்லாமே அவருக்கு தெரியும், நாம் செய்திருக்கின்ற ஒவ்வொரு தவறான விஷயங்களும் அவருக்கு தெரியும் என்று பைபிள் சொல்கின்றது.

இந்த **கருப்பு** நிறம் பாவத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. தேவனுக்கு பிடிக்காத எந்த செயலை நாம் செய்தாலும் அதுவே பாவம்.

பாவம் தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கின்றது. தேவன் நீதியும், பரிசுத்தமாக இருப்பதினால், அவர் பாவத்தை தண்டிக்க வேண்டும்.

## பாவம்

**எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்ற-வர்களாகி,**

ரோமர் 3:23.

தேவன் நம்மை அதிகமாய் அன்பு கூறுவதினால், நம்முடைய பாவங்களுக்காக அவருடைய ஒரே குமாரன் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார்.

உனக்காகவும், எனக்காகவும் இயேசு சிலுவையில் துன்பப்பட்டார், இரத்தம் சிந்தினார், மரித்தார் என்பதை இந்த **சிகப்பு** நிறம் ஞாபகப்படுத்துகிறது. பிறகு மரணம் மற்றும் பாவத்தை தோற்கடித்து, மரணத்திலிருந்து அவர் உயிரோடு எழுந்தார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்.

(காப்பாற்றப்படுவாய்)

## இயேசு

**நாம் பாவிகளாயி-ருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்-பண்ணினார்.**

ரோமர் 5:8.

இந்த **வெள்ளை** நிறம் சுத்தமாய் இருக்கும் விஷயங்களை நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

இயேசு கிறிஸ்துவில் நாம் நம்பிக்கை வைத்து நம்முடைய பாவங்களை அறிக்கை செய்தால் தேவனுடைய பார்வையில் நாம் சுத்தமாக இருக்க முடியும் என்று பைபிள் சொல்கின்றது.

அதை நாம் செய்யும் போது அவர் நம்மை மன்னித்து, நம்மை சுத்தமாக்குகின்றார். இப்பொழுதே நம்முடைய ஆண்டவராக, இயேசுவோடு நாம் புதிய வாழ்க்கையை வாழத் தொடங்கலாம், மற்றும் நித்தியமான வாழ்க்கையை அவரோடு சந்தோஷமாக அனுபவிக்கலாம்.

## புது வாழ்க்கை

**இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்-குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியா-யிருக்கிறான்.**

2 கொரிந்தியர் 5:17. 2

உயிருள்ள எல்லாம் வளரும். இந்த **பச்சை** நிறம் நம்முடைய புது வாழ்க்கையில் நாமும் வளர வேண்டும் என்று ஞாபகப்படுத்துகிறது.

நாம் ஜெபம் செய்யும்போது தேவனோடு பேசுவதினாலும், பைபிள் படிப்பதினாலும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்கின்றோம்.

நமக்கு மற்ற கிறிஸ்தவர்களோடு நட்புறவு இருக்கவேண்டும், மற்றும் தேவாலயத்திற்கு தொடர்ந்து செல்ல வேண்டும்.

## வளர்ச்சி

**நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைக-ளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையா-யிருங்கள்.**

1 பேதுரு 2:3